**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.46/2024
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : லெட்சுமணன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of November 2024.

06.11.2024

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 02.09.2023ம் தேதி 11.30 மணியளவில் குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்ததில் நானும், மாடசாமியும் நின்று கொண்டிருந்தோம். அங்கு முதுகுளத்தூர் போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது என்னிடமும், மாடசாமி என்பவரிடமும் கையொப்பம் கேட்டார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் கதையன் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த ஊர் ஆதனக்குறிச்சி பக்கத்தில் இருக்கிறது என்றால் சரிதான். எனது ஊருக்கும் குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்ததிற்கும் சுமார் 7 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். தேரிருவேலி செல்வதற்காக நானும், எனது நண்பர் மாடசாமியும் பேருந்து

நிறுத்ததில் நின்று கொண்டிருந்தோம். எங்களது ஊர் அருகே சமத்துவபுரம் பேருந்து நிறுத்ததில் இருந்து தேரிருவேலி செல்லலாம் என்றால் சரிதான்.

2) இயற்கை உபாதை கழித்துவிட்டு குமாராக்குறிச்சி பேருத்து நிறுத்ததிற்கு சென்றோம். நான் எனது ஊரில் இருந்து காலை 10.00 மணிக்கு கிளம்பினேன். நான் இயற்கை உபாதை கழிப்பதற்காக குமாரச்குறிச்சி பேருந்து நிறுத்ததிற்கு வரவில்லை என்றாலும் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட புகார்தாரர் ஆதன்க்குறிச்சியை சேர்ந்தவர் அவர் எனது பக்கத்து ஊர் என்பதால் தெரியும்.

3) அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அ.சா.1 கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் அந்த இடத்திற்கு வரவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பத்தாம் வகுப்பு படித்துளளேன். நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.